Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (18-2-66) இதழ் 10

மாசி 7 ஷவ்வால பிறை 26 வெள்ளிக்கிழமை




## இலங்கையர் சாதனை

யாழ்ப்பாணம், வெள்ளி

உலகில் அதிகமாக செத்தல் மிளகாய் சாப்பிடுபவர்கள் யார் தெரியுமா? சாட்சாத் நம் நாட்டவர்தான்.

இலங்கையர் தான் உலகில் அதிகமாக செத்தல் மிளகாய் உபயோகிக்கின்றனர். இவற்றை இங்கு இறக்குமதி செய்வதற்காக மட்டும் வருடந்தோறும் 4,70,00,000 ரூபா செலவிடப்படுகிறது.

# அதிகமான ஊழியருக்கு இடமாற்றம்

## இறக்குமதி கட்டுப்பாட்டு இலாகா ஊழல்களின் எதிரொலி

### லஞ்சம் வாங்கிய ஒருவர் வேலைநீக்கம் செய்யப்பட்டார்

வெள்ளவத்தை, வியா.

இறக்குமதிக் கட்டுப்பாட்டு இலாகாவில் காணப்பட்ட ஊழல்கள் களைந்தெறியப் பட்டிருக்கின்றன. இதன் எதிரொலியாக, ஏராளமான ஊழியர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதுடன் சில ஊழியர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இறக்குமதிக் கட்டுப்பாட்டு இலாகா ஆணையாளர் திரு. எஸ். சிறிவர்த்தன மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள் நல்லபலனை அளித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல்களைக் களைந்தெறியும் முதல் நடவடிக்கையாக திரு. சிறிவர்த்தன பெருந்தொகையான ஊழியர்களை வேறு இலாககவுக்கு இடமாற்றம் செய்துள்ளார்.

### லஞ்சம் வாங்குவதை நேரில் பார்த்தார்!

கடந்த செவ்வாய்க்கிழமை கட்டுப்பாட்டு இலாகா ஆணையாளரின் அலுவலகத்துக்கு சமீபமாக, கட்டுப்பாட்டு இலாகா ஊழியர் ஒருவர் வர்த்தகர் ஒருவரிடம் கைலஞ்சம் வாங்கியதை ஆணையாளர் நேரில் கண்டுகொண்டதைத் தொடர்ந்து அவர் உடனடியாக தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டார். மற்றும் சிலருக்கும் இப்படியான உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

### வர்த்தகர் — ஊழியர் தொடர்பு

புறக்கோட்டை வர்த்தகர்களுக்கும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு இலாகா ஊழியர்களுக்குமிடையே இரகசியத் தொடர்புகள் இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஒரு வர்த்தகருக்கு, இறக்குமதி லைசென்ஸ் அனுமதிக்கப்படும் அறிவித்தல் உத்தியோகபூர்வமாகக் கிடைக்கு முன்னரே ஊழியர்கள் இதனைத் தெரிந்து வைத்துக்கொண்டு அதனைச் சாதகமாக்கி, குறிப்பிட்ட வர்த்தகரிடம் லஞ்சம் வாங்குவதாகவும் தெரியவந்துள்ளது.

## மார்ச் மாதத்துக்குப் பின்னர் ஆசிரியர் இடமாற்றம் இல்லை

பம்பலப்பிட்டி, வியா.

மார்ச் மாதத்துக்குப் பின்னர் ஆசிரியர்கள் எவரும் இடமாற்றம்செய்யப்பட மாட்டார்கள்.

பாடசாலைகளில் வேலைகள் சுமுகமாக, ஒழுங்காக நடைபெற இது உதவும் என்று எதிர்பாக்கப்படுகிறது.

இதுபற்றி கல்வி இலாகா டைரக்டர் திரு. ஈ. எச். டி. அல்விஸ் தெரிவிக்கையில், பாடசாலைகளில் சேரவிரும்பும் எல்லா மாணவர்களுக்கும் அந்தப் பாடசாலைகளில் இடவசதி ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் அதிகமாக பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு தங்களது பதிக்குள்ளிருக்கும் பாடசாலைகளில் சேர்ப்பிக்க விரும்பவில்லை என்றும் கூறினார்.

றோயல் ஆரம்பக்கல்லூரி, ஆனந்தா, நாலந்தா, தேர்ஸ்டன், விசாகவித்தியாலயம் ஆகிய கல்லூரிகளில்தான் அதிகமானவர்கள் புதிதாக சேர்ப்பிக்கப்பட்டுள்ளனர்.

## ரூ. 34,000 நகைகள் திருட்டு!

சுழிபுரம், வியா.

சித்தங்கேணிப் பகுதியில் நேற்று நள்ளிரவு மூன்று வீடுகளில் கள்வர் புகுந்து தங்கப் பவுண் நகைகள் ரூபாய் நோட்டுகள் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர். இதுசம்பந்தமாக இன்னும் எவரும் கைது செய்யப்படவில்லை.

இளைப்பாறிய 'ஒவசியர்' ஒருவர் வீட்டிலிருந்த சுமார் 34,000 ரூபா பெறுமதியான நகைகள் களவு போயுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 48 மணித்தியாலயங்களாக அவ்வீட்டில் உள்ள நாய்கள் குரைக்காமல் படுத்த படுக்கையாக கிடக்கின்றன. அதே போல் தான் வீட்டிலுள்ளவர்களுக்கு நித்திரை மருந்து தூவப்பட்டிருக்கலாம் எனவும் துணிகரமான முறையில் இக்களவு நடைபெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வீட்டுக்குள் இருந்து எடுத்த நகைகள் வைக்கப்பட்டிருந்த பெட்டி பக்கத்திலுள்ள கிணற்றில் கிடக்கக் காணப்பட்டது.

அதே இரவில் சீவல் தொழிலாளர் ஒருவர் வீட்டிலும் திருட்டு முயற்சி நடைபெற்றதெனவும் இதைக் கண்ட ஒருவர் கூக்குரல் போட்டதால் கள்வர் ஓட்டம்பிடித்தனராம்.

அதே நேரத்துக்கு சற்று பின்னர் சலவைத் தொழிலாளி ஒருவர் வீட்டில் குழந்தையின் கையில் இருந்த வளையல் இரண்டும் பணமும் களவு போய் விட்டதாகவும் பட்டு துணிகள் சிலவற்றையும் காணவில்லை என்றும் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாற்று உடுப்புகள் போட்டும், நித்திரை மருந்தைப் பயன் படுத்தியும், மோட்டார் வண்டியில் வந்தும் தான் இக் களவுகள் எடுக்கப்பட்டுள்ளன. சங்கானை பொலிசார் இது குறித்துத் தீவிரமாக விசாரணை செய்து வருகின்றனர்.

## இரத்ததானம்

பருத்தித்துறை, வியா.

பருத்தித்துறை, நகரும் இரத்த வங்கி பருத்தித்துறையில் பொது ஜனங்களிடத்திலும் பாடசாலைகளிலும் மற்ற அரசாங்க ஸ்தாபனங்களிலும் இரத்தம் சேகரிப்பதற்காக டாக்டர் ஜோசோப் தலைமையில் இரத்த தானக் குழு இங்கு வந்தது. புதன்கிழமை காலை புலோலி வேலாயுதம் இந்து ஆண்கள் கல்லூரியில் மாணவர்களிடமும் ஆசிரியர்களிடத்திலும் இருந்து இரத்ததானம் பெறப்பட்டது. அநேகமாணவர்களும் ஆசிரியர்களும் இரத்ததானம் செய்தனர்.

இரத்தம் கொடுத்ததற்கு ஒவ்வொருவருக்கும் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சன்மானத்தை பெற்ற ஆசிரியர்கள் எல்லோரும் மணவர்களும் கயரோக நிவாரணசபைக்கு அனுப்பும்படி பாடசாலை அதிபரிடம் கொடுத்தனர்.

## 800 புதிய அதிபர்கள் நியமனம்

பம்பலப்பிட்டி, வியா.

800 புதிய அதிபர்களை நியமிக்க கல்வி இலாகா உத்தேசித்துள்ளது. தற்போது பதில் அதிபர்கள் கடமையாற்றி வரும் பாடசாலைகளில் புதிதாக நியமிக்கப்படும் அதிபர்கள் கடமையாற்றுவார்கள் என அறியப்படுகிறது.

அடுத்த மாதத்தில் பல கல்லூரி அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட விருப்பதாகவும் தெரிகிறது. கல்லூரி அதிபர்களின் விருப்பப்படியே அதிகமான இடமாற்றங்கள் செய்யப்படுவதாகவும் மற்ற இடங்கள் கல்வி இலாகாவின் முடிவுப்படி செய்யப்படுவதாகவும் அறியப்படுகிறது.

## பதவி உயர்வு

பம்பலப்பிட்டி, வியா

முதல் பிரிவிலிருக்கும் சுமார் 80 அரசாங்க எழுது வினைஞர் ஊழியர்கள் விசேஷ பிரிவுக்கு உயர்த்தப்படவிருக்கிறார்கள்.

## உபகாரசசம்பளத்தில் வெளிநாடு செல்கிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

தீவுப்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ நிர்வாகக் காரியதரிசியாகக் கடமையாற்றும் திரு. சி. திருநாவுக்கரசு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு அரசாங்க உபகாரச் சம்பளம் பெற்று கூட்டுறவு சம்பந்தப்பட்ட கல்வியில் பயிற்சி பெறுவதற்காக இம்மாதம் 21-ந் திகதி ஜெர்மன் செல்கிறார். இவர் மாஸ்கோ, டமஸ்கஸ், சிரியா, சவூதி, அரேபியா, ஏடன் ஆகிய நாடுகளுக்கும் செல்வார்.

திரு. திருநாவுக்கரசு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் பழைய மாணவராவார். சென்னைப் புதுக்கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற இவர் அங்கு பயின்ற காலத்தில் உலக சர்வகலாசாலை மாணவர்சங்கக் காரியதரிசி பதவியை வகித்தார். இந்திய தேசியக்கமிட்டி மகாநாட்டுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் பிரதிநிதியாகச் சென்றிருந்தார். இவர் ஒரு விளையாட்டு வீரருமாவார். இவர் சரவணையைச் சேர்ந்த திரு. முருகப்பா சின்னத்தம்பி தம்பதிகளின் புத்திரராவார்.

## தற்காலிக பிரதமர்

பம்பலப்பிட்டி, வியா

இம்மாதம் 20-ம் திகதி பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா வெளிநாடு செல்லும் பொழுது இலங்கையின் தற்காலிக பிரதமராக ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இருப்பார்.

பம்பலப்பிட்டி, வியா.

பெப்ரவரி மாதம் 20-ம் திகதி, ஜூலை மாதம் 17-ம் திகதி, நவம்பர் மாதம் 27-ம் திகதி ஆகிய மூன்று நாட்களும் பாடசாலை விடுமுறை நாட்களாகும். இவை மேலதிகமாக வழங்கப்படவிருக்கும் விடுமுறை தினங்கள்.

## காலின்றி வாழவிரும்பாதவர் கிணற்றில் விழுந்து தற்கொலை

கோண்டாவில், வியாழன்

காலின்றி உயிர் வாழ விரும்பாத ஒருவர் இரவு நேரத்தில் யாருக்கும் தெரியாமல் கிணற்றில்பாய்ந்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கொக்குவிலில் இடம்பெற்றுள்ளது.

கொக்குவில் ஆடியபாதம் சந்தியைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் என்பவரின் மரணவிசாரணையின் போது இதுபற்றித் தெரியவந்தது. 45வயதான இவர் சலரோகத்தினால் பீடிக்கப்பட்டு கடந்த மூன்று மாதங்களாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்தார் எனவும் காலை அகற்றி சத்திரசிகிச்சை செய்யவேண்டுமென வைத்திய ஆலோசனை கூறப்பட்டதும், அதைவிரும்பாதுமானிப்பாய் ஆஸ்பத்திரிக்குச் சென்றார் எனவும், அங்கும் காலை அகற்றுவதே சிறந்ததென வைத்தியர்கள் ஆலோசனை கூறியதும் அந்த ஆஸ்பத்திரியையும்விட்டுவீட்டில் வந்திருந்தார்.

சம்பவம் நடந்ததினமிரவு அவர் 'கால் களற்றுவதைவிட இறப்பதுமேல்' என்று சொல்லிக் கொண்டிருந்தார் எனவும் அதிகாலை 3 மணியளவில் எழுந்து 'ஹார்லிக்ஸ்' தருமாறு சகோதரியிடம் கேட்டதாகவும், அதைக் கரைத்துக் குடித்துவிட்டு நித்திரைக்குப் போனதாகவும் விடியற்காலை எழுந்து பார்த்தபோது அவரைக் காணவில்லை என்றும் சாட்சியத்தின் போது தெரிவிக்கப்பட்டது. அவரது வீட்டுக்கு அயலிலுள்ள வளவொன்றில் உள்ள கிணற்றில் கிடந்த அவரது சடலம் கைகள் மடித்தபடியே குப்புறக் காணப்பட்டதாகவும், கால் நடக்க முடி

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸ் அனுப்பியது

பாரிஸ், பெப். 17

பிரான்ஸ் செயற்கைக் கிரகமொன்றை வெற்றிகரமாக வானவெளிக்கு அனுப்பியது. அல்ஜிரியாவிலுள்ள சகரா பாலைவனத்திலிருந்து இது அனுப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இறைவனின் உண்மை அடியார்கள் உலகத்தையும் உலக இயற்கைப் பொருள்களையும் அருள்வடிவமாகக் காண்பர். பிறரோடு உரையாடுவதற்கும் பழகுதற்கும் தாமாக முயலாமல் அவற்றைத் தவிர்த்தொழுகுவர்.

—''திருக்கோயில்''

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box ... JAFFNA
Telegrams: EELA NADU Jaffna, Phone ...

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மாசி 7உ (18-2-66)

# ஒத்துழைப்பின் அவசியம்

தேசிய பிரச்னைகளைத் தீர்ப்பதில் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியமென்பதை உணர்ந்து இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பார்லிமெண்டிலே அவர்களுடைய பூரண ஒத்துழைப்பை நாடியுள்ளார். காலஞ்சென்ற சாஸ்திரி அவர்கள் அடிக்கடி எதிர்க்கட்சித்தலைவர்களைச் சந்தித்து முக்கிய பிரச்னைகளைப் பற்றி அவர்களுடன் கலந்தாலோசிப்பது வழக்கமென்றும் அந்தமேலான முன்மாதிரியைத் தாமும் பின்பற்ற விரும்புவதாகவும் ஸ்ரீமதி இந்திரா காந்தி கூறி ''அநேகமாக எல்லாப் பிரச்னைகளும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையென்றும், ஆகவே எல்லாக்கட்சியினரும் சாத்திமானவரை ஒற்றுமையாகக் காரியம் செய்வது நாட்டின் மேலான நன்மைக்கு அவசியமென்றும் அவர் சரியாக வற்புறுத்தியுள்ளார். உணவு முதலிய பிரச்னைகளைத் தீர்ப்பதில் அவர்களது ஒத்துழைப்பை வேண்டியுள்ளதுடன், பலகட்சித் தலைவர்களையும் நேரில் அழைத்து டாஷ்கண்ட் விஷயமாகப் பேச்சுக்கள் நடத்தியுள்ளார். இந்தமேலான முன்மாதிரியை இலங்கையிலும் பின்பற்றுவதை நாட்டுமக்கள் பெரிதும் வரவேற்பர்.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த ஒவ்வொருவரும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே இதை ஆட்சியாளர்களோ வேறுயாருமோ மறந்துவிடக்கூடாது. அவர்களுக்கும் ஆட்சிப்பொறுப்பையேற்றுநடத்துபவர்களுக்கும் எவ்வளவுதூரம் ஒத்துழைப்பும் ஒற்றுமையும் இருக்கின்றதோ அவ்வளவும் மக்கள் நன்மைக்கும் ஜனநாயகம் வெற்றி பெறுவதற்கும் உதவுவதாக இருக்கும். ஆகவே எதிர்க்கட்சியினரை தங்களது விரோதிகளென்று நினைக்காமல், தங்களைப் போல் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்று மதித்து, கூடியமட்டில் அவர்களது ஒத்துழைப்புடன் காரியங்கள் செய்யவேண்டியது ஆட்சிப்பொறுப்பை வகிப்பவர்களின் கடமையாகும். இதேசமயம் எதிர்க்கட்சிகளும், பிரதமரின் அழைப்பை மதித்து, பேச்சுகள் நடத்தி, தங்கள்யோசனைகளைத் தாராளமாகத் தெரிவிக்கவேண்டும். கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். என்றாலும் இவ்விதம் இருதரப்பினரும்முன்னதாகவே கூடிப் பேசுவதால், அவர்களிடையே தப்பெண்ணங்கள் மறையவும் நல்லுறவுகள் ஏற்படவும் பெரிதும் உதவியாக ...

உதாரணமாக இலங்கைக்கு புதிய அரசியல் அமைப்பு ... பெரிய காரியம் செய்யவேண்டியுள்ளது. அரசியலில் சில திருத்தங்கள் மட்டும் செய்யவே தேசியஅரசாங்கம் உத்தேசித்திருந்தது. ஆனால் எதிர்க்கட்சியினர் கூறியயோசனைகளை மதித்து புதிய அரசியல் அமைப்பைத் தயாரிக்க தேசிய அரசாங்கம் ஒப்புக்கொண்டது வரவேற்கத்தக்கது. இவ்வித விஷயங்களில் கருத்துவேற்றுமைகள் அதிகம் இருக்கக்கூடும். சிறப்பாகமொழி, சிறுபான்மை சமூகத்தின் அடிப்படை உரிமைகள் முதலியன குறிப்பிடத்தக்கவை. பழைய அரசியல் அமைப்பிலே சிறுபான்மைச் சமூகத்துக்கு அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடிய 29-வது விதியை அகற்றிவிட வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கேட்கின்றனர். 29-வது விதியை நீக்கிய பின் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளுக்கான பாதுகாப்புகள் அளிக்க என்னசெய்ய உத்தேசமென்பது சொல்லப்படவில்லை. சிறுபான்மை சமூக பிரதிநிதிகள் எண்ணிக்கையல குறைவாக இருக்கலாம். ஆனால் அவர்களது நம்பிக்கையையும் பூரண ஒத்துழைப்பையும் பெற்றால்தான் ஜனநாயக ஆட்சிமுறை வெற்றி பெறவும், நாட்டில் அமைதியும் முன்னேற்றமும் ஏற்படவும் முடியுமென்பது பழைய 18 வருட அனுபவத்தில் தெரிந்து விட்டது. ஆகவே இங்குஜனநாயகம் விரும்பத்தக்க வெற்றி பெறவேண்டுமாயின் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைப் போல், சிறுபான்மை சமூகங்களின் பீதிகளை அகற்றி, அவர்களது ஒத்துழைப்பைப் பெற ஆவன செய்ய வேண்டும். குறுகியநோக்கங்களை விட்டு தேச நன்மையையே முக்கியமாகக் கருதி, பல பிரதிநிதிகளும் தீர்க்கதரிசனத்துடனும் அரசியல்ஞானத்துடனும் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும்.

---

## அரசியல் சரித்திர மன்ற நிர்வாகிகள்

உரும்பராய், வியா.

உரும்பராய் இந்துக்கல்லூரி, கலைப்பிரிவு மாணவர்களின் மேற்பார்வையில் இயங்கும் 'அரசியல் சரித்திர மன்ற'த்தின் இவ்வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

போஷகர்: வ. புகாலிங்கம், தலைவர்: ஆனந்தராஜா, உபதலைவர்: செ. சிவலிங்கம், காரியதரிசி: து. மனோகரன், உபகாரியதரிசி: ந. தம்பித்துரை, தனாதிகாரி: அ. கனகசூரியர், உபதனாதிகாரி: பொ. சற்குணநாதன்.

வழமைபோல இவ்வருடமும் மேற்படி மன்றத்தினரால் 'சஞ்சிகை' வெளியிடுவதென்று மன்ற நிர்வாகிகளால் முடிவு செய்யப்பட்டது. அதன் ஆசிரியராக அ. நவரத்தினம் தெரிவு செய்யப்பட்டார். உதவி ஆசிரியராக க. ஜெயவீரசிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

# மஹா சிவராத்திரி

[சிவபெருமானுக்குரிய விரதங்கள் எட்டு. அவையாவன, சோமவார விரதம், திருவாதிரை விரதம். உமா மகேசுர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கல்யாண சுந்தர விரதம், குலவிரதம், இடபவிரதம் என்பனவாம். சிவராத்திரி விரதமாவது மாசி மாதத்து கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி திதியில் வருவது. அன்றைய தினத்திலே இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் லிங்கோற்பவ காலம். இக்காலத்திலே சிவதரிசனம் செய்வது உத்தமோத்தம புண்ணியம். நான்கு யாமமும் நித்திரையொழிக்க இயலாதவர்கள் லிங்கோற்பவ காலம் நீங்கும் வரையுமாயினும் நித்திரையொழித்தல் வேண்டும். சிவலிங்க வழிபாட்டின் மகிமையைப் பற்றி மதுரை, திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் 291-வது குருமகா சந்நிதானம் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளியிருப்பது கீழே தரப்படுகிறது]

அருவமாயிருக்கின்ற பரம்பொருளை யாரும் அறிந்து கொள்ளமுடியாது. அறவே அறிய முடியாத அருவ நிலையிலுள்ள பரம்பொருளை யாரும் மனதில் பாவித்துக் கொள்ளவோ, பதித்துக் கொள்ளவோ, தியானித்துக்கொள்ளவோ முடியாதென்றால் அதை வழிபாடாற்றவும் பிறரை வழிபடச் செய்யவும் முடியாதல்லவா? ஏதோ ஒரு சக்தி அண்டங்களையெல்லாம் தொழிற்படுத்திக் கொண்டு இருக்கின்றது என்று மாத்திரம் அனுமானித்துக் கொள்ளலாம். அதனை விளக்கிக்கொள்ள முற்றுவமையாக எதையும் சொல்லிக்கொள்ள முடியாதெனினும் சாதாரணமாக விளங்கிக்கொள்ளக் கூடியதான ஒரு உபமானம் சொல்லலாம். சூரியனின் கதிர்களை யாரும் கண்ணால் காணமுடிவதுமில்லை; பிறருக்குக் காட்ட முடிவதுமில்லை. அப்படிப்பட்ட சூரியனுடைய கதிர்கள் பூமியில் பட்ட மாத்திரத்தில் பூமி சூடாவதை யாவரும் அறிவர். கதிர்களைக் காண முடியாதது போலவே சூட்டின் தன்மையையும் கண்களால் காண முடியாது. ஆனால் அக்கதிர்களை ஒரு பூதக்கண்ணாடி மூலமாக ஒரு பஞ்சின் மேல் ஒரு முகமாகப் பாயும்படி செய்தால், பஞ்சு தீப்பிடித்து நாம் காணக்கூடியதாதவும், பிறருக்குக் காட்டக்கூடியதாகவும், அதனை நமக்கும் பிறருக்கும் உபயோகமாகும்படி செய்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கிறதல்லவா?

அதுபோலவே அருவமாய் உள்ள சிவபரம்பொருளும் அருவுருவ நிலையான சோதி சொரூபத்தை முதற்கண் தாங்கிக்கொள்ளத் திருவுளம் கொண்டது. அந்த சோதி சொரூபமே சிவலிங்க வடிவமாகும். யாரும் அறிய முடியாத அருவனாய் இருந்த பரமசிவம், பக்குவப்பட்ட ஜீவான்மக்களுக்குக் காட்சி கொடுக்கவும், தமது ஆட்சியின் சட்ட திட்டங்களாகிய வேதாகமங்களை அருளிச் செய்யவும் எடுத்துக் கொண்ட மூர்த்தமே சிவலிங்க வடிவம்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐம் பூதங்களில், எவ்வாறு ஆகாயம் என்ற பூதம், மற்ற நான்கு பூதங்களிலும் விரவி நின்று, தன்னில் யாருமில்லாத தனிப்பெரும் பூதமாக இருக்கின்றதோ, அதேபோல, இறைவனும் தான் எல்லாவற்றிலும் கலந்திருந்தாலும், தன்னில் யாருமில்லாத தனிபெரும் ஜோதியாகத் திகழ்கின்ற தன்மையை சதாசிவம் எனப்படும் இலிங்கம் உணர்த்துவதாகும். அம்மூர்த்தம் வேறு எம்மதத்திலும் காண முடியாத உண்மைத் தத்துவங்களைக் கொண்ட அரிய திருமூர்த்தமாகும்.

சிவலிங்கம் மூன்று கூறுகளையுடையது. அடிப்பாகம் நாற்கோணவடிவாய் பூமிக்கு அதிதியான, ... பிரம்ம பாகத்தை உணர்த்துவதாகும். மத்தியபாகம் எட்டுப் பட்டமுடைய அட்டகோண வடிவமாய், வாமை, சேஷ்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி என்னும் மகா விஷ்ணுவின் எட்டுசக்திகளும், அதனோடு பொருந்த இருக்கும் ஆவுடை எனப்படும் மனோன்மணிகளாகிய ஒன்பதாவது சக்தியும் சேர்ந்து நவசக்திகளாகி, நீருக்கு அதிபதியான காத்தல் எனப்படும் 'ஸ்திதி' கர்த்தரான விஷ்ணு பாகத்தை உணர்த்துவதாகும் அரன் என்பதன் பெண்பாலே அரி என்பதாகும். அதனாலேயே 'அரியல்லால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே' என்று திருநாவுக்கரசு நாயனாரும் அருளிச் செய்திருக்கிறார். அதனால் தான் நமது அப்பனாகிய சிவபெருமானது இடப்பாகம், நமது அம்மையாக விளங்கும் மகா விஷ்ணுவின் பாகமாகவும், மாதொருபாகன், உமாமகேஸ்வரன், அர்த்தநாரி, சங்கர நாராயணன், என்ற ஆணும் பெண்ணும் சேர்ந்த அபூர்வமூர்த்தங்களாகவும் அமைந்து திகழ்கின்றன. அதற்கு மேலுள்ள பாகம் நெருப்பிற்கு அதிபதியும், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய முத்தொழில்களுக்கும் அதிபதியான சிவபாகமாகும்.

ஆகவே சிவலிங்கத்தை வழிபட்டால் பிரம்மாவை வழிபட்ட பலனும், மகா விஷ்ணுவின் பத்து திருவவதாரங்களை வழிபட்ட பலனும், சிவபெருமானின் இருபத்தைந்து மூர்த்தங்களை வழிபட்ட பலனும், ஒருங்காகக் கிடைக்கக்கூடியதாக இருக்கிறதென்பதை வேதாகமங்கள் வலியுறுத்துகின்றன.

மேலும், பாவங்களிலெல்லாம் மிகவும் கொடியது பிரம்மஹத்தி தோஷம் எனப்படும் மனிதரைக் கொன்ற கொலைப் பாவம். அதை நீக்கவேண்டுமானால் தனியாக எந்த மூர்த்தியையும் வழிபட்டு நீக்கிக் கொள்ளமுடியாதென்பது வேதாகம விதி. அதை நீக்கவேண்டுமானால் சிவலிங்க பூசையே செய்தாக வேண்டும். இராவண சம்ஹாரத்துக்குப் பிறகு ஸ்ரீ இராமபிரான் இராமேஸ்வரத்தில் இராமநாதரை சிவலிங்கத்தில் பிரதிஷ்டைசெய்து வழிபட்டதையும், அநுமார் காசியிலிருந்து இலிங்கம் கொண்டு வந்து வழிபட்டதையும், சூரசம்ஹாரத்துக்குப்பிறகு ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் திருச்செந்தூரில் சிவபூஜைசெய்து வழிபட்டதையும், கஜமுகா சூரனை சம்ஹாரம் செய்தபிறகு ஸ்ரீவிநாயகப் பெருமான் திருச்செங்காட்டங்குடியில் சிவலிங்கபூஜை செய்துவழிபட்டதையும் காணலாம்.

## ஐயாறன் எழுதுவது

இன்னும் இரண்டு நாட்களில் பிரதமர் டட்லி சேனநாயக்கா பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் புறப்பட்டுச் செல்லுகிறார். அவர் அங்கு பல தலைவர்களைக் கண்டு பேசுவதுடன், வைத்திய பரிசோதனையும் செய்து கொள்வாராம்.

பிரதமருக்கு அடிக்கடி சுகவீனமேற்பட்டு வருவது நாட்டுக்கே கவலை அளிக்கக் கூடிய விஷயம். சுதந்திர தினவிழாவிலும் அவர் கலந்து கொள்ள முடியாமல் போயிற்று. அவர் வெளி நாடுகளில் பிரயாணம் செய்வது நல்ல மாறுதலாக இருப்பதுடன், அவர் பூரணசுகத்துடன் சீக்கிரமே திரும்பி வந்து, தமது பெரும் பொறுப்பை ஏற்று வெற்றிகரமாக நடத்தவேண்டுமென்பது பலரது பிரார்த்தனையும்.

ஃ ஃ ஃ

தேசிய அரசாங்கத்திலுள்ள ஏழு கட்சிகளையும் ஒற்றுமைப்படுத்தி நடத்தி வருபவர் டட்லியார்தான். அவர் இல்லாத சமயத்திலே ஜே ஆர். தான் பிரதமரின் பொறுப்புகளைக் கவனிக்கப் போகிறார். சமீப காலத்தில் ஜே. ஆர். உறுதியாகவும் திறமையாகவும் காரியங்கள் செய்து, பல சோதனைகளையும் வெற்றியுடன் சமாளித்து வந்துள்ளார். ஆகவே பிரதமர் இல்லாத சமயத்தில் ஆட்சியை நல்ல முறையில் அவர் நடத்தி வருவாரென்றே நம்பலாம்.

டட்லியோ, ஜே ஆரோ சமீபத்தில் இந்தியா சென்றதாகத் தெரியவில்லை. சுமார் 25 வருடங்களுக்கு முன் இவ்விருவரும் இலங்கை தேசிய காங்கிரஸின் சார்பாக, ஹரிபுரா காங்கிரஸுக்குப் பிரதிநிதிகளாகச் சென்றிருந்தனர். அதன் பிறகு இலங்கையில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. கொத்தலாவலை, ஸ்ரீமா இவர்கள் பிரதமர்களாக இருக்கையில் இந்தியா சென்றார்கள். இந்தியா-இலங்கை பிரச்னைபற்றிப் பேசி ஒப்பந்தமும் செய்து வந்தனர்.

அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற இப்போது இருதரப்பினரும் முனைந்திருக்கின்றனர். திரு. டட்லியும், ஜே. ஆரும் மீண்டும் இந்தியா விஜயம் செய்வது பலவிதங்களிலும் நல்லது. பிரதமர் சாஸ்திரியின் இறுதிச்சடங்கின்போது இலங்கையிலிருந்து விசேஷதூதர் யாரும் ஏன் செல்லவில்லை என்று நமது பார்லிமெண்டிலே எதிர்க்கட்சியினரே கேட்டனர். நேருஜிக்கு அஞ்சலி செலுத்த ஸ்ரீமா இங்கிருந்து பறந்து சென்றார். நோக்கம் இந்தியாவுடன் நெருங்கிய நல்லுறவை வளர்க்கத்தான்.

இந்தியாவுடனும் குறிப்பாக தென்னிந்தியாவுடனும் தொடர்பு கொண்டால், இலங்கையை 'தி. மு. க.'வுக்கு விற்றுவிடுவதாக இங்கு சிலர் கோஷம் போடுவதுண்டு. இதற்கு அஞ்சித்தான் டட்லியும், ஜே. ஆரும் இந்தியா செல்லாமலிருக்கிறார்களா?

இப்போது இந்தியா அதிக கஷ்டப்படினும் நமக்கு சில உணவுப் பொருள்களை 2 கோடி ரூபாய்வரை கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறதாம். இந்திரா காந்திக்கு இலங்கை என்றால் அதிக பிரியம். டட்லியின் அழைப்பை ஏற்று அவர் இங்கு வந்து போனபின்பும் டட்லியும் இந்தியாசென்று இருதேச நல்லுறவும் பலப்படவேண்டும்.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் துருப்புக்களைக் கட்டுப்படுத்த இந்தியா, பாக். இணக்கம்

## 1949-ம் ஆண்டு அளவுக்கு துருப்புக்கள் குறைக்கப்படும்

ராவல்பிண்டி, பெப். 17

**காஷ்மீரிலுள்ள தங்களது துருப்புகளைக் குறைத்துக் கொள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் உடன்பட்டிருக்கின்றன.**

**இந்தியா, பாகிஸ்தான் இராணுவத் தளபதிகள் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத் துக்கிணங்க மேற்படி திட்டம் செயல்படப் போவதாக இங்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் டாஷ்கண்ட் பிரகடனத்தின்மற்றுமொரு அம்சம் செயல்படத் தொடங்குவதாக பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

கடந்த வியாழக்கிழமை இங்கு இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் சௌத்திரிக்கும் பாகிஸ்தான் இராணுவத் தலைவர் ஜெனரல் மூஸாவுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து உடன்பாடொன்று ஏற்பட்டதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் வசமுள்ள அஸாத் காஷ்மீரிலும், இந்தியாவின் ஜம்முகாஷ்மீரிலும் தேவைக்கு அதிகமாகவிருக்கும் துருப்புகளை அகற்றிக் கொள்வதென்றும் 1949-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இருந்த அளவுக்கு துருப்புகளைக் குறைப்பதென்றும் இவர்களிருவரும் இணங்கியுள்ளனர்.

இத்திட்டம் இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் அமுலாக வேண்டுமென்று இவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

காஷ்மீரில் இந்தியா, பாகிஸ்தான் துருப்புகள் குறைக்கும் வேலைகள் ஐக்கியநாடுகள் பிரதிநிதிகள் மேற்பார்வையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி இங்குள்ள பார்வையாளர்கள் கருத்துவெளியிடுகையில், காஷ்மீரில் துருப்புகளைக் குறைக்கும் திட்டம் இருநாடுகளின் நெருக்கடியைத் தணிக்கும் என்று தெரிவித்தனர்.

காலம் சென்ற இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியும், பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும் டாஷ்கண்டில் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மற்றுமொரு நன்மை இப்பொழுது கிடைக்கிறது என்று பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

## ஒரு வாரத்தில் 700 பேர் பலி!

சைகோன், பெப். 17

கடந்த ஒருவாரகால சண்டையில் மட்டும் தென்வியட்னமில் 600 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர் என்றும் 61 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சண்டையின்போது 90 அமெரிக்க துருப்புகள் பலியானுர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

## முடப்பட்ட தமிழ் பாடசாலைகளின் விபரம்

### கிளிநொச்சி எம். பி. கல்விமந்திரியைக் கேட்பார்

பம்பலப்பிட்டி, வியாழன்

1956-ம் வருடம் ஜனவரி 1-ம் திகதிக்கும் 1965-ம் வருடம் நவம்பர் மாதத்துக்குமிடையில் மூடப்பட்ட தமிழ் பாடசாலைகளினதும், தமிழ் மொழிமூலம் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கல்லூரிகளினதும் பெயர்களையும், அவை மூடப்பட்ட திகதிகளையும் தெரிவிக்குமாறு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கல்வி, கலாசார விவகார அமைச்சரைக் கேட்கவிருக்கிறுர்.

அடுத்தமாதம் 8-ம் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் திரு. இரத்தினம் கல்வி, கலாச்சார விவகார அமைச்சரை கேட்கவிருக்கும் தொடர்பான கேள்விகள் வருமாறு:

1956-ம் வருடம் ஜனவரி முதலாம் திகதிக்கும் 1965ம் வருடம் நவம்பர் முதலாம் திகதிக்குமிடையில் 'தமிழ்ப் பிரிவுகள்' மூடப்பெற்றுள்ள பாடசாலைகளினதும் கல்லூரிகளினதும் பெயர்களையும், அவை மூடப்பட்ட திகதிகளையும் 1956-ம் வருடம் ஜனவரி முதலாம் திகதிக்கும் 1965ம் வருடம் நவம்பர் முதலாம் திகதிக்குமிடையில் 'தமிழ்ப் பிரிவுகளின்' எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ள பாடசாலைகளினதும், கல்லூரிகளினதும் பெயர்களையும், அவ்விம்குறைக்கப்பட்டுள்ள பிரிவுகளின் எண்ணிக்கையையும் மந்திரி கூறுவாரா?

1956-ம் வருடம் ஜனவரி முதலாம் திகதிக்கும் 1956ம் வருடம் நவம்பர் முதலாம் திகதிக்குமிடையில் ஒவ்வொருவருடமும் தமிழ் மொழிமூலம் கல்வி பயிற்றப்படுகின்ற பாடசாலைகள், கல்லூரிகள் ஆகியனவற்றிலிருந்து இளைப்பாறிய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். பட்டதாரி ஆசிரியர்கள் ஏனைய தரத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கையையும் 1956ம் வருடம் ஜனவரி முதலாம் திகதிக்கும் 1965ம் வருடம் நவம்பர் முதலாம் திகதிக்குமிடையில் ஒவ்வொருவருடமும் தமிழ்மொழி மூலம் கல்வி பயிற்றப்படுகின்ற பாடசாலைகளுக்கும், கல்லூரிகளுக்கும் நியமிக்கப்பட்ட பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். பட்டதாரி ஆசிரியர்கள் ஏனைய தரத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கையையும் மந்திரி கூறுவாரா?

# அஸாம் ரயில் விபத்து: 27 பேர் மாண்டனர்

புதுடில்லி, பெப். 17

இந்தியாவின் வடகிழக்கு எல்லையில், அஸாம் பிரயாணிகள் ரயில் நேற்றிரவு விபத்துக்குள்ளானதில் 27 பேர் கொல்லப்பட்டனர். 84 பேர் காயமுற்றனர்.

காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் விபத்துபற்றியமுழு விபரங்களும் உடனடியாக அறிவிக்கபபடவில்லை. இருந்தபோதிலும் முதலில் கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி, பிரயாணிகள் பெட்டியொன்றின் அடியில் ஏற்பட்ட வெடி விபத்து காரணமாக இச்சம்பவம் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது விசாரணைகள் நடைபெறுகின்றன.

### யூகோவில்

யூகோஸ்லேவியாவில் நேற்று பிரயாணிகள் ரயில் ஒன்றும் சரக்கு ரயில் ஒன்றும் மோதிக்கொண்டதில் 29 பேர் மாண்டனர். 28 பேர் காயமடைந்தனர்.

## குண்டு வீச்சு நீடிக்கிறது

சைகோன், பெப். 17

வடக்கு வியட்னமில் நேற்று அமெரிக்க விமானங்கள் தீவிரமாகத் தாக்குதல்கள் நடத்தின.

சாலைகள், பாலங்கள், இராணுவ இலக்குகள் ஆகியவற்றின்மீது அமெரிக்க விமானங்கள் குண்டுவீசியதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த 37 நாள் விமான குண்டுவீச்சு ஓய்வுக்குப் பின்னர் நேற்றுத்தான் விமானத்தாக்குதல்கள் பலமாக இருந்ததாம்.

## "குட்டையைக் குழப்பி மீன்பிடிக்க முயல்கின்றனர்"

பம்பலப்பிட்டி, வியா

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்மக்கள் சிங்களம் படிக்க விரும்புகிறுர்கள் என்றும் ஆனல் கட்டாயப்படுத்தப்படும்போது அவ்விதம் அவர்கள் விரும்பவில்லை என்றும் செனட்டர் ஜி. பி. ரணசிங்கா செனட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சிங்களத்தை சகல பாடசாலைகளிலுப் கட்டாயபாடமாக்க வேண்டும் என்றும் ஆறுவருட காலத்திற்குள் ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களுக்கும் கட்டாய பாடமாக்க வேண்டும் எனவும் கோரும் எதிர்க்கட்சியினர் பிரேரணையையொட்டிப் பேசுகையிலேயே செனட்டர் ரணசிங்கா இவ்வாறு தெரிவித்தார்.

குட்டையைக் குழப்பி அதிலிருந்து மீன்பிடிக்கும் முயற்சியிலேயே எதிர்க்கட்சியினர் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் அரசாங்கத்துக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காகவே இந்தவிதமான பிரேரணையைக் கொண்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். முன்னுள் கல்விமந்திரி திரு. கலுகல்லை சிங்கள ஆசிரியர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு [illegible] வதாகக் கூறிவிட்டுப் பின்னர் அப்படிச் செய்யவில்லை என்லும் ஆனல் இப்பொழுது தேசிய அரசாங்கம் சிங்கள எழுதுவினைஞர்களை [illegible] களுக்கு அனுப்பி வைத்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை

# பட்டினசபை வளவுக்குள் கைகலப்பு!

### கூட்டத்தில் இடம்பெற்ற அமளி துமளியின் எதிரொலி

மாவிட்டபுரம், வியா.

காங்கேசன்துறைப் பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுநடைபெற்ற பொழுது சபைக்குள் காரசாரமான வாக்குவாதம்ஏற்பட்டது. கூட்டம் முடிவடைந்த பின்னர் சபை வளவிற்குள் பார்வையாளர்களிடையே கைகலப்பும்நடைபெற்றுள்ளது.

இக்கைகலப்பிலேதான் தாக்குதலுக்குள்ளானதாக ஐந்தாம் வட்டார அங்கத்தவர் திரு. ச. சிவனடியார் பொலிசில் புகார்செய்துள்ளார். முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. சு. கிருபாமூர்த்தி தனதுகாரைத்தாக்கமுயற்சி நடைபெற்றதாகவும்பொலிசில் புகார் செய்துள்ளார். இதனைத்தவிர வேறு இருவரும் (அங்கத்தவர்களல்ல) சபை வளவிற்குள் தாக்கப்பட்டதாக காங்கேசன் துறைப்பொலிசில் புகார் செய்துள்ளார்கள். இப்புகார்கள் சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பெரிஞண்டோ விசாரணை செய்கிறுர்.

### அங்கத்தவர் வாக்குவாதம்

காங்கேசன்துறைப் பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் இன்று பிற்பகல் மூன்றுமணிக்கு சபை மண்டபத்தில் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தலைமையில் ஆரம்பமாகியது. கூட்டம் ஆரம்பமாகியதும் முதல் நிகழ்ச்சியாக சென்ற மாதாந்தக்கூட்ட அறிக்கை சபையின் அங்கீகாரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது முதலாம்வட்டார அங்கத்தவர் திரு. சு. கிருபாமூர்த்தி சில திருத்தங்களைக் கொண்டுவந்தார். இக கட்டத்தில் திரு. கிருபாமூர்த்திக்கும் ஐந்தாம்வட்டார அங்கத்தவர் திரு. ச. சிவனடியாருக்குமிடையில் காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றது. இவ்வாக்குவாதத்தில் இருவரும் பரஸ்பரம் குற்றம் சாட்டியதுடன் தேவையற்ற வார்த்தைகளும் பரிமாறப்பட்டன. திருத்தங்கங் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### பிரேரணையும் வாக்கெடுப்பும்

அடுத்து முதலாம்வட்டார அங்கத்தவர திரு. கிருபாமூர்த்தி 'இப்பட்டினத்து இருபடமாளிகைகளிலும் தமாஷா வரிச்சோதனை நடத்திவந்த இறைவரி மேற்பார்வையாளர்களை தலைவர் நிறுத் விட்டு தனக்குச்சார்பான இருபேரை சங்கத்தின் அங்கீகாரம் இல்லாது நியமித்ததைவன்மையாகக் கண்டிப்பதுடன் அவ்விருவவரயும் உடனடியாக நிறுத்திவிட வேண்டுமெனவும் இச் சங்கம் தீர்மானிக்கிறது' என்னும்பிரேரணையைப்பிரேரித்தார். இதை நாலாம் வட்டார அங்கத்தவர் திரு. சு. வே. சீனிவாசகம் ஆமோதித்தார்.

தலைவர் இப்பிரேரணைக்கு பதிலளிக்கையில், தான் முன்னர் பதவியிலிருக்கையில் சபையின் தீர்மானத்துக்கு இணங்க இரு வெளியாட்களை தமாஷா வரி அறவிட ஜயமித்ததாகவும் பின்னர் பதவிக்குவந்ததலைவர் அவர்களை நீக்கிவிட்டு சபையின் தீர்மானத்துக்குமுரணுகஇவ் வேலைக்கு இறைவரி உத்தியோகத்தர்களை நியமித்ததாகவும் தாம் திரும்பவும் இப்பொழுது பதவிக்குவந்ததும் இறைவரி வசூலிப்பவர்களை தமாஷாவரி அறவிடுவதைத் தடைசெய்து முன்னர் வேலைசெய்தஒருவரையும் வேறு ஒருவரையும் நியமித்ததாகவும் இச்செய்தி முந்திய தீர்மானத்துக்கு இணக்கமாகவுள்ளதாகவும் கூறினுர்.

முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. கிருபாமூர்த்தி தலைவரின்பதில்பற்றிக்குறிப்பிடுகையில், முந்திய தலைவர்செய்தது பிழையென்றுல் இப்போதுள்ள தலைவர் செய்கிறதும் பிழைதானென்றும் கூறிப்பிரேரணையைவாக்கெடுப்புக்கு விடும்படி கேட்டுக்கொண்டார். பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது பிரேரணை 3—2 வாக்குகளால் நிறைவேறியது.

### "டீசல் எண்ணெய் வரியை ரத்துசெய்க"

அடுத்து 5-ம்வட்டார அங்கத்தவர் திரு. சிவனடியார் 'எங்கள் பட்டினசபை எல்லைக்குள் ஏறக்குறைய 150 மீன்பிடிவள்ளங்களை உபயோகித்து மீன்பிடிக்கிறுர்கள். இவ்வள்ளங்கள் இயங்குவது டீசல் எண்ணையில். ஆனல் அரசாங்கம் டீசல் எண்ணைக்கு சென்ற மாதம் தொடக்கம் கலனுக்கு 50சத வீதம் வரியை அதிகரித்திருக்கிறது. இதனுல் மீன்பிடியாளர்கள் எவ்வளவோ பாதிக்கப்பட்டிருக்கிறுர்கள் நாளொன்றுக்கு ஒருவள்ளத்துக்குச்சராசரி 20 கலன் டீசல் எண்ணைக்குமேல் தேவைப்படுகிறது. தற்போதையவிலையின்படி நாளொன்றுக்கு பத்துரூபா அதிகமாக செலவு செய்யவேண்டியிருக்கிறது. ஆனல் மீன்பிடிவள்ளங்கள் கூடிய நாட்களில் பத்துரூபாவை உழைக்கமுடியாதிருக்கிறுர்கள். ஆகையால் மீன்பிடி வள்ளங்களுக்கு இப்பொழுது கூடுதலாக விதித்த வரியை நீக்கி முன்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்நவீனம்

# வாஞ்சி மலை

— க. கனகலிங்கம் —

கிழவனின் அசுர உருவம் கண்டு மயங்கி வீழ்ந்தனர் பச்சிளம் குழவிகள். கிழவனே பலம்கொண்டமட்டும் கத்தினான். சற்று நேரத்திற்கெல்லாம் அவன் குரலைத் தொடர்ந்து பல குரல்கள் வாஞ்சிமலைச் சேரியின் பல்வேறு பாகங்களிலிருந்து எழுந்தன. அக்குரல்கள் வாஞ்சிமலைகளில் [illegible]மோதி எதிரொலித்தன.

இராட்சத கோட்டான் பறவைகள் ''கில் கில்'' என்று பயத்தினால் அவலக் குரல் எழுப்பியவண்ணம் அங்குமிங்குமாகப் பறந்து கொண்டிருந்தன. நரிகள் ஊளையிட்டன. நாகங்கள் புதர்களில் ஓடிமறைந்தன. வாஞ்சிமலைச் சேரியில் பறை ஒலி முழங்கின. சற்று நேரத்திற்கெல்லாம் அரக்கர்கூட்டம் சிறுவர்களைச் சூழ்ந்து கொண்டது.

கோழிக்குஞ்சுகளைத் தூக்கிச்செல்லும் பருந்துபோல் அரக்கர் கூட்டம் சிறுவர்களைத் தூக்கிக்கொண்டு வானத்தில் பறந்தன. சிறுவர்கள் பயத்தினால் கதறியழுதனர். அரக்கர்களால் தூக்கிச்செல்லப்பட்ட சிறுவர்கள் பாவத்திற்கு சற்றும் அஞ்சாத அரக்கர் தலைவன் முன் நிறுத்தப்பட்டனர். அவன் அரக்கர்களைப் பார்த்து சற்று நளினமாக ''கோழிக்குஞ்சுகளை'' இந்தக் கொண்டுபோய் அடைத்து மிகுதியை வழமைபோல் கவனியுங்கள் என்று கட்டளையிட்டான். தலைவன் கட்டளையை சிரமேற்கொண்டனர் அரக்கர்கள். கோட்டைச் சிறைக் கதவுகள் திறந்தன. விலங்குகள் அடைக்கப்படுவன போல் அடைக்கப்பட்டனர் சிறுவர்கள். சற்று நேரத்திற்கெல்லாம் அரக்கர்களில் ஒருவன் சிறைக்கதவைத் திறந்து உணவுப்பொருள்களை வைத்துவிட்டு திடீரென்று வெளியேறி ஏதோ ஒன்று நடக்க இருப்பதை எதிர்பார்ப்பவன் போல் சற்று தூரத்தே நின்றபடி சிறுவர்களை நோக்கிய வண்ணமிருந்தான். பசியால் வாடிய பச்சிளஞ் சிறுவர்கள் 'அவக்' 'அவக்' என்று உணவுப்பொருள்களை எடுத்து உண்டனர். என்ன ஆச்சரியம்? உணவுப் பொருள்களை உண்டமாத்திரத்தே விஷம்கொண்ட பல இன பாம்புகளாக மாறினார்கள் சிறுவர்கள். பல இன சர்ப்பங்களாக சிறுவர்கள் மாறியதால் இனத்திற்கினம் குரோதம் ஏற்பட்டு ஒன்றையொன்று எதிர்க்க ஆரம்பித்தன. தூரத்தே வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற அரக்கன் சிறைக்கதவைத் திறந்துவிட்டான். திறந்து விட்ட மாத்திரத்தே சர்ப்பங்கள் நாலாதிசையிலும் சிதறுண்டு ஓடின. ஆனால் மூன்று வேளையும் மகுடி ஊதி அவர்களை அழைத்து உணவிட்டு வந்தான் அரக்கன் ஒருவன். அவன் அவர்களுக்கு ஒவ்வோர் பெயரிட்டு அழைத்துவந்தான்.

ஒருநாள் சேடன் என்னும் பாம்பு வாஞ்சிமலைச் சேரியை சுற்றிப்பார்க்க விழைந்தது. அது வாஞ்சிமலைச்சேரியின் பல்வேறு பாகங்களையும் சுற்றிப் பார்த்துவந்தபோது சேரியின் ஒருபுறத்தில் ஓர் அழகிய மண்டபத்தைக்கண்டு ஒருவாறு உட்சென்றது. அங்கு அறையொன்றில் இரத்தினக்கற்கள் பதித்த பீடத்தில் அழகிய பெண் சிலை ஒன்று கம்பீரமாக நிற்பதையும் சிலையைச் சுற்றி பலவகைக் கனிகள் சிதறுண்டு கிடப்பதையும் ஆங்காங்கே யானைத்தந்தங்களும், புலிப்பற்களும், மனித மண்டை ஓடுகளும் சிதறுண்டு கிடப்பதையும் சிலைக்குமுன் நிறுத்தப்பட்டிருக்கும் பளிச்சிடும் வாளையும் கண்டுகொண்டது. அறையைச்சுற்றி கண்ணோட்டம் விட்ட சேடன் யாரும் இல்லாமல் போகவே சிதறுண்டு கிடக்கும் கனிகளை சுவைக்கவிரும்பி அவற்றில் சிலவற்றைச் சுவைக்க ஆரம்பித்தது. என்ன ஆச்சரியம்!

கனிகளை சுவைத்த மாத்திரத்தே சேடன் தனது பாம்பு வடிவத்தை நீங்கி பழைய உருவத்தைப் பெற்றது. சேடன் இப்பொழுது சிறுவனானான். ஒன்றும் தெரியாமல் விழித்தான் சிறுவன், டக்.. டக்.. ரிக்.. ரிக்.. சத்தம் கேட்ட சிறுவன் ஓடி ஒழிந்தான் சிலைக்குப்பின். சிலைக்குப்பின் இருந்த வண்ணம் சத்தம்வந்த திசையை நோக்கினான். சிலைக்கு எதிர்ப்புறமாகவுள்ள கதவு திறக்கப்படுவதையும் பெண் ஒருத்தி கையிலுள்ள தடியால் தட்டித்தட்டி அறைக்குள் பிரவேசிப்பதையும் நோக்கிய சிறுவன் அந்தப் பெண்ணை கூர்ந்து நோக்கினான். நோக்கியவன் அப்பெண் கண்ணிழந்தவள் என்பதைக் கண்டுகொண்டான். அக் குருட்டுப் பெண் சிலைக்குமுன் முழந்தாழிட்டு தான் கொண்டுவந்த மூன்றுகனிகளைச் சிலையின் பாதத்தில் வைத்து வணங்கிவிட்டு மீண்டும் அக்கனிகளை எடுத்துக்கொண்டு வந்தவழியே திரும்பினான்.

குருட்டுப் பெண் செய்வதைக் கவனித்துவந்த சிறுவன், இந்தப் பெண் யார்? என்பதை அறிவதில் தீவிர ஆவல்கொண்டான்.

(அடுத்த இதழில் முடியும்)

# மூளைக்கு வேலை

மூளைக்கு வேலை பகுதியை எக்காரணம் கொண்டும நிறுத்தவேண்டாமென்றும் கடந்தசில வாரங்களாக இடம் பெறும் கேள்விகள் மாதிரி தொடர்ந்து வெளியிடுமாறும் பலர் எழுதியிருக்கின்றனர். உங்களின் விருப்பத்துக்கு மாறாக இப்பகுதி இடம்பெறமாட்டாது. உங்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு வழக்கம்போல இவ்வாரமும் கேள்விகள் வெளியாகின்றன.

**கேள்வி மண்டலம்**

இதோ இரண்டு கேள்விகள். தயாராகிக்கொள்ளுங்கள்.

கேள்வி ஒன்று: ஐரோப்பாவின் முதலாவது பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்த கிரேக்க தத்துவஞானி யார்? அவரின் பெயர் என்ன?

கேள்வி இரண்டு: இலங்கையில் முதல் தடவையாக எப்போது வானொலி ஒலிபரப்பப்பட்டது?

இங்கு கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்குரிய விடைகளை மட்டும் எழுதி இம்மாதம் 24-ம்திகதிக்கு முன்னதாக அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய விலாசம்: மாணவர் மலர், ''ஈழநாடு'', த.பெ:49 யாழ்ப்பாணம். விடைகளை தபாலட்டையில் அனுப்புங்கள்.

— சாந்தா

## மாணவர் மலர்.

# செய்தி தெரியுமா?

உலகத்தில் மின்சாரத்தின் பாவனை நாளுக்குநாள் அதிகரித்துவருவதால் மெழுகு வர்த்தியின் உற்பத்திவீழ்ச்சி அடைந்து கொண்டு வரும் என்றுதானே நீங்கள் சாதாரணமாக எண்ணுவீர்கள். ஆனால் உண்மை அதுவல்ல. இங்கிலாந்தில் ஒரு மெழுகு வர்த்தி தயாரிப்பாளர் தாம் நாளொன்றுக்கு சுமார் பத்து லட்சம் அதாவது செக்கனுக்கு ஆயிரம் மெழுகு வர்த்திக்குமேல் தயாரிப்பதாகக் கூறுகிறார், ஆனால் பிறந்தநாள்கேக்குகளுக்காக புதுமாதிரி மெழுகு வர்த்தி தயாரிப்பதற்கு சுமார் ஒரு கிழமை பிடிக்கலாம் என்று மேலும் அவர் கூறுகிறார்.

•

கொடியநஞ்சு என்றவுடன் பாம்பு விஷமோ அல்லது பொட்டாசியம் சைனட்டோ உங்கள் நினைவுக்கு வரலாம். நஞ்சுகளில் கொடியதானது தவளைகளிலிருந்து பெறப்படுகிறது. கொக்கோய் (Kokoi) எனப்படும் இவ்வகைத் தவளைகள் கொலம்பியாவிலுள்ள காடுகளில் வசிக்கின்றன. இந்த நஞ்சையே செவ்விந்தியர் தமது அம்புகளைத் தோய்க்கப் பயன்படுத்தினர். சில நிமிஷங்களிலேயே இதனால் மரணம் சம்பவிக்கிறது. இக்கொடிய நஞ்சு, வியாதிகளை மாற்றுவதற்கு உதவுமென்ற எண்ணத்தோடு பல விஞ்ஞானிகள் இதன் தன்மையை ஆராய்ந்து வருகின்றனர். இவர்களில் முக்கியமானவர்கள் கலாநிதிகள் ஜோன் டலி, பெர்னூட் விற்கொப் ஆகியோரே.

இந்நஞ்சிலுள்ள மூலகங்களான கார்பன், ஐதரசன், நைதரசன், ஒட்சிசன் அணுக்கள் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன என்று ஆராய்கின்றனர். 1964 ஜனவரியில் இவர்கள் சுமார் 2400 கொக்கொய் தவளைகளைச் சேர்த்து அவற்றின் தோலிலிருந்து 30 மில்லிகிராம் (சுமார் 1/1000 அவுன்சு) சத்தைப்பெற்றனர். ஆனால் ஒரு தவளையிலிருந்து பெறப்படும் நஞ்சு சுமார் முப்பது அம்புகளை நஞ்சூட்டப்போதும். மேலும் பதினைந்து வருடங்களுக்கு இந்நச்சுத்தன்மை கெடாமல் இருக்கும் இக்கொடிய நஞ்சை செயலற்றுப்போகும் படியான மருந்து இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

திரட்டியவர்:
வே. இரகுநாதன்

# ஒழுக்கம்

— நே. என். ராஜா —

அதிகாலையில் கண் விழித்து
எழுதல் வேண்டும்
அன்றாடக் கடமைகளை
முடித்தல் வேண்டும்
பக்தியோடும் இறைவன் [தாள்
பணிதல் வேண்டும்
பரமனின் புகழதனைப்
பாடல் வேண்டும்.

கல்வியை நாடோறும்
கற்றல் வேண்டும்
கற்றதைப்போல் நாடோ [றும்
ஒழுகல் வேண்டும்
கல்வி தரு ஆசானைக் கனம்
[illegible] வேண்டும்
[illegible] கல்லாய்க் கற்று
நன்கு தேறல் வேண்டும்

# கவிதையும் கற்பனையும்

— வாமா - மாணிக்கம் —

அலைகள் புரண்டோடும் ஆழ்கடலிலே - அந்திமாலைக் கதிரவனின் அழகு வர்ணனைச் சிறப்பிலே - அடர்த்தியான வனங்களினூடே அடுக்கடுக்காக வானத்தை அளாவி வளர்ந்திருக்கும் வனப்பு மிக்க மலர் விருட்சங்களிலே ஐந்திணைக் காட்சிகளிலே, இன்னோரன்ன பிற இயற்கை ஏதுக்கள் அனைத்திலுமே கவிஞன் புனையும் கவிதை எதிரொலிக்கின்றது.

கற்பனை, கவிதையை வளம் பெறவைக்கும். அது வர்ண சால தீபங்களுக்குச் சமமானது. எழுத்துக்களினாலும், மற்றும் சீர், தளை, அடி, தொடை முதலியவற்றாலும் பின்னிப் பிணைக்கப்பட்டு எதுகை மோனைக்கு ஏற்றவாறு இலக்கண வரம்பைத் தாண்டிச் செல்லாது இயற்றப்படுவதே கவிதை. சம்பவக் கோர்வைகளை மையஸ்தானமாக வைத்து அவற்றைக் காண்டங்களினூடே படலங்களாகவும், பருவங்களினூடே சருக்கங்களாகவும் வகுத்து உவமான உவமேய உருவக அணிகளை ஒழுங்குபடுத்தி படிப்பவர் உள்ளத்தை தம்பாலிழுக்கும் காந்த சக்திக்கு நிகரானது கவிதை. ஆனால் கற்பனையோ, அற்பவஸ்துவை அண்டாகாரமாகக் காட்டும் அணுதரிசினிக்கண்ணாடிக் கொப்பானது.

கவிதைகள் எத்தகைய மனோபாவம் படைத்தவர்களாலும் ரசிக்கப்படும் இயல்பு வாய்ந்தவை. கவிதை புனையும் கவிஞன் எத்திறத்தார்க்கும் பொதுவானதான கற்பனைத் திறனைப் பிரயோகிக்க கடமைப்பட்டிருக்கிறான். அன்றியும் அவனால் புகுத்தப்படும் கற்பனை சுற்றாடலுக்கு உட்பட்டிருக்கவேண்டுமேயன்றி அதற்கு அப்பாற்பட்டதாக ஒருபோதும் தகுதியாகாது. பிரதியுற்பத்தியாக நிலைபெறும் கற்பனை ஒரு மனிதனுடைய ஐம்புல அனுபவ வளர்ச்சியின் அடிப்படையாதலின் அம்மனிதன் கண்டிராத - கேட்டிராத கற்பனை அவனால் ரசிக்க முடியாததொன்று சான்றாக,

''சீதமதிக் குடைகீழ்ச் செம்மை அறங்கிடப்பத், தாதவிழ் பூந்தாரான் தனிக்காத்தான் - மாதர் அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்ஒருகூட்டில்வாழும் உலகு'' என்பதைக் காட்டலாம். வெண்பாவிற் புகழேந்தியின் கற்பனை வித்துவத்தன்மை மேற்குறிப்பிட்ட செய்யுளில் கரைபுரண்டு பாய்கிறது. செய்யுளின் சாராம்சத்தை அன்வயம் செய்து பார்த்தால் நிடதநாட்டை நளமகாராஜன் எங்ஙனம் சமநிலை ததும்ப நிர்வகித்தான் என்ற உண்மை தெற்றெனப் புலப்படுகிறது. அதுவே நிஜசம்பவம். எத்திறத்தோருடைய மனோ நிலைக்கும் சாதகமாக அமைந்திருந்தது, அவனுடைய ஆட்சிச் சிறப்பு. இதையோர் கவிதை ரூபமாக வரையும்போது அங்கே கற்பனை அதியாவசியமாகத் தேவைப்படுகிறது.

கவிஞன் ஆரவமரசற்று ஆலோசித்திருக்க வேண்டும் தனது அனுபவ அறிவைப் பயன்படுத்தி இருக்கவேண்

(5-ம் பக்கம் பார்க்க)

ஒரு புதிர்

# குழந்தை என்ன சொன்னது?

உங்களால் முடியுமா?

சேகரும் சந்திராவும் சகோதரர்கள். இருவரும் அன்று பிற்பகல் படத்திற்குப் போவதற்குத் திட்டமிட்டுக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் அவர்களிடையே அவர்களின் இளைய சகோதரன் (மூன்று வயது) மோகன் குறுக்கிட்டான். ''திட்டத்தை'' வெளியே சொன்னால் தம்பியும் குறுக்கிட்டு ஆபத்து ஏற்படும் என்று நினைத்த சேகரும் சந்திராவும் புதிய வழியொன்றை கையாண்டனர்.

''அப்ப...நாமிருவரும் அம்மாவிடம் சொல்லிவிட்டு பானு...டானு...ம மன்னு பார்க்கப்போவோம்...'' என்றான் சேகர்.

குழந்தை மோகன் யோசித்து ம்..ம்... என்று சிணுங்கிக்கொண்டு நானும் வரப் போகிறேன் என்றது.

''நாங்க எங்கேயும் போகல்ல...நீ எங்க வரப் போறாய்...?'' என்று கேட்டான் சேகர். உடனே குழந்தை''.....'' என்று பதிலளித்தது!

குழந்தை மோகன் என்ன சொன்னது? உங்களால் இதனை யூகிக்க முடியுமானால் அதனைக் கண்டுபிடித்து எமக்கு எழுதி அனுப்புங்கள். ஒரு சின்ன விஷயம். உங்களுக்கு மூன்று நான்கு வயதுள்ள சகோதரர்கள் இருந்தால் அவர்களிடமே இதனைப் பரீட்சித்துப் பாருங்கள்.

உங்களின் விடைகள் இம்மாதம் 24-ந் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்க வேண்டும், அனுப்பவேண்டிய விலாசம் ''குழந்தை சொன்னது'', மாணவர் மலர், ஈழநாடு, த. பெ. 49, யாழ்ப்பாணம்.

# உங்களுடன்.. சில நிமிடம்

மாணவர்மலர் பகுதியில் கலந்துகொள்பவர்கள் தொகை வாரந்தோறும் அதிகரிப்பதால் உங்களின் கருத்துக்களையும் அறிய விரும்புகின்றோம்.

இங்கு வெளியாகும் விஷயங்கள் பற்றிய உங்களின் அபிப்பிராயங்களைச் சுருக்கமாக எழுதியனுப்புங்கள்.

புதிய பகுதிகளை ஆரம்பிக்க நாம் யோசித்திருப்பதால் இதுபற்றிய ஆலோசனைகளையும் கருத்துக்களையும் அறிய விரும்புகின்றோம். இங்கு வெளியாகும் கதை, கட்டுரை பற்றிய உங்களின் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் ''பொதுமேடை'' மாணவர் மலர், ''ஈழநாடு'', த. பெ. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

அடுத்த
''மாணவர் மலர்''
26-2-1966-ல்
வெளிவரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
திருகோணமலைக் கச்சேரி
என் 315-சி. என். 5799 இலக்கத்தை யுடைய •விக்க முடியாத நிலையில் இருக்கும் ''போட்சன் தேம்ஸ்' லொறியை வாங்குதல்.

நீர்ப்பாசனத் திணைக்களம்
என் 309- வவுனி குளத் திட்டத்தில் இடது பக்க வாய்க்காலின் கீழ் வேலைகள்.

இதன் முழுவிபரங்களுக்கும் 1/-2-66ல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, II-ம் தொகுதியை பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 1668

இடவசதி தேவை
என் 332 வண்ணார்பண்ணை யாழ்ப்பாண இந்துக்கல்லூரிக்கும் நாவலர் வீதிக்கு மிடையில் பிரபல்யமான ஒரு இடத்தில், வண்ணார்பண்ணை தபாற்கந்தோருக்கும் தபாற்கந்தோர் தலைவர் விடுதிக்கும் ஒரு கட்டிடம் வாடகைக்குத் தேவைப்படுகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள தபாற் கந்தோர்களின் (வட) பெரும்பாக அத்தியட்சகர் அவர்களுக்கு முழு விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

தபாற் தந்தி தலைமை அதிபதி,
1662 கொழும்பு

### காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை போசனசாலை

மேற்படி போசனசாலைக்கு ஒரு தலைமை சமையல்காரர் தேவை. அத்தாட்சிப் பத்திரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்துக்கு மனுச்செய்யவும். ஒரு மாதத்திற்கு தகுதிகாண் நிலையிலிருந்து தகுதியற்றவராயின் வேலை நீக்கம் செய்யப்படுவார்.

சம்பளம்: எல்லாப் படிகளும்உட்பட மொத்த மாதச் சம்பளம் ரூபா நூற்றி இருபத்தைந்து. (ரூ. 125/-)

தலைவர்
காங்கேசன்
சீமேந்து தொழிற்சாலை
போசனசாலை.
காங்கேசன்
சீமேந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
2008

### ஏல விற்பனை

வலிகாமம் கிழக்கு
பல நோ. கூ. ச சமாசம்

மேற்படி சமாசத்தில் பயன்படுத்தக்கூடிய பழைய லொறி ரயர்களும் வெற்றுச்சாக்குகளும் வெற்றுத் தகரக்களும் வெற்றுப் பெட்டிகளும் வெற்று சீமேந்து பைக்கற்றுகளும் காட்டுத் தடுகளும் கழிவு மரங்களும் விற்பனைக்கு இருக்கின்றன. ஏலவிற்பனை 23-2-66 புதன் கிழமை காலை 11 மணியளவில் நடைபெறும்.

க. வீ. கனகசபாபதி, தலைவர்.
நீர்வேலி, 17-2-66.
2012

## சீன வைத்தியகோஷ்டி

ராவல்பிண்டி, பெப். 17

சீன வைத்திய தூது கோஷ்டியொன்று அடுத்த புதன்கிழமை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவிருக்கிறது.

ஐந்துபேர் கொண்ட இத் தூதுகோஷ்டி இங்கு 17 தினங்கள் தங்கியிருக்கும்.

—

## கவிதையும் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டும். பொது மக்களுக்குத் தான் எடுத்தாள எண்ணும் கற்பனை பொருந்துமா என்று தனக்குள் தானே விளுக்குறிமூலம் விமர்சனம் செய்திருக்க வேண்டும் தன் பரந்துபட்டநய உணர்ச்சியை துணையாக்கி இருக்கவேண்டும். இவற்றின் பிரதி பிம்பமாக கொஞ்சு மொழி பேசும் கிளியும் அதனைத் தாவிப் பிடிக்கும் பருந்தும் தாம் சென்ம வைரிகள் என்ற பாரம்பரிய உணர்ச்சியைப் பஸ்மீகரமாக்கி ஒரு கூட்டில் உல்லாசமாக வாழ்வதைப் போல நிடத நாட்டுமக்கள் ஒற்றுமையாக, ஒருவரையொருவர் உயர்வு - தாழ்வு என்று கருதாது, ஐக்கியமாக வாழ்க்கை நடாத்தும் வண்ணம் நளமகாராஜன் தனது அரசியலை அமைத்தான். கற்பனைமுலம் கவிதை வளம் பெறும் வடிவத்தை இங்கு காணலாம்.

(தொடரும்)


REGAL--JAFFNA
NOW SHOWING
Todd Armstrong
Nancy Kovack
in
JASON AND THE
ARGONAUTS
(Eastman-Color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
சிவாஜி - தேவிகா
நடித்த
கர்ணன்
இன்று நள்ளிரவு 1-30க்கு விசேஷ காட்சி உண்டு.

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
நாடோடி மன்னன்
தினசரி 4-15க்கு மட்டும்
சாத்தான் நெவர் சிலீப்ஸ்

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
வெள்ளிக்கிழமை மட்டும் சிவராத்திரியை முன்னிட்டு நள்ளிரவு 1-30 க்கு காட்சியும் உண்டு.
இதுவரை ஹாஸ்ய பாத்திரங்களில் நடித்துவந்த நாகேஷ் இப்படத்தில் கதாநாயகனுகத் தோன்றி மிகவும் அற்புதமாக நடித்திருக்கிறுர்.
நாகேஷ் - கே. ஆர். விஜயா
முத்துராமன்
எஸ். ராமராவ், காஞ்சனு
நடித்த
ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்
சர்வர் சுந்தரம்

## புதிய புறக்டர்



யாழ்ப்பாணம், வெள்ளி

திரு. சதாசிவம் லோகீஸ்வரன் அண்மையில் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக, நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் அக்குவைனுஸ் பல்கலைக்கழகம், ஸ்ரீசோமாஸ்கந்தக்கல்லூரி ஆகியவைகளின் பழைய மாணவராவர். மேற்படி ஸ்தாபனங்களில் கல்விகலாச்சார மன்றங்களில் தலைவர் காரியதரிசி போன்ற பதவிகளை வசித்துள்ளார். காந்திய சேவா சங்கம் நடாத்திய கட்டுரைப்போட்டியில் முதற்பரிசையும், ஈழகேசரிப் பத்திரிகை நடத்திய அகில இலங்கைச் சித்திரப் போட்டியில் முதற் பரிசையும் பெற்ற இவர், ''புதுவை'' என்ற புனைபெயரில் பல சிறுகதைகளும் எழுதியுள்ளார்.

இவர் புத்தூரைச்சேர்ந்த திரு சுப்பிரமணியம் சதாசிவம் ஜே. பி. தம்பதிகளின் புதல்வராவர்.

—

## பட்டினசபை . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னிருந்தவிலைப்படி டீசல்எண்ணை விற்கவேண்டுமென்று மீன்பிடி அமைச்சரையும் காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினரையும் கேட்டுக் கொள்வதென இச்சபை தீர்மானிக்கின்றது என்னும் பிரேரணையைக் கொண்டுவந்தார். ஆறும் வட்டார அங்கத்தவர் திரு. பி. இமானுவேல் ஆமோதித்தார். பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

### உபதலைவர் தெரிவு

இக்கூட்டத்திற்கு இரண்டாம் வட்டார அங்கத்தவர் தவிர்ந்த மற்றைய அங்கத்தவர்கள் ஐவரும் சமூகமளித்திருந்தனர். இக்கூட்டத்தில் சபையின் உபதலைராக ஆறும் வட்டார அங்கத்தவர் திரு. பி. இம்மானுவேல் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

### கைகலப்பு

இக்கூட்டத்தில் மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டம் முடிவுற்றதும் சபைக்குள் 4-ம் வட்டார அங்கத்தவரும் 5-ம் வட்டார அங்கத்தவரும் வாக்குவாதப்பட்டார்கள். இது முடிவுற்றதும் 1-ம் வட்டார அங்கத்தவர் சென்ற ஒரு காரை ஒருவர் சேதப்படுத்த முயற்சித்தார். இதனைத் தொடர்ந்து இரு பிரிவினருக்கிடையில் கைகலப்பு நடைபெற்றது. இக்கைகலப்பு சம்பந்தமாக ஒரு அங்கத்தவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் பெர்ணண்டோ தலைமையில் பொலிஸ் கோஷ்டியொன்று பட்டினசபைக்கு விரைந்தது. ஆனுல் அதற்குமுன்னுல் அவ்வழியால் வந்த இராணுவ ஜீப்பைக் கண்ட கைகலப்புக்காரர்கள் ஓட்டம்பிடித்துவிட்டார்கள். இக்கைகலப்புச் சம்பந்த[illegible] நால்வரைப் பொலிஸார் தேடுகின்றனர்.

## வரி விளம்பரம்

தண்ணீர்க் குழாய்கள் இணைக்கவும், பம்புகள்திருத்தவும், மோட்டார் றிவயின்டிங் மற்றும் மின்சார உபகரணங்கள் சிறந்தமுறையில் குறித்த நேரத்தில் திருத்திக் கொடுக்கப்படும். எம்முடன் நேரடியாக அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S. நாகேசு, ஜெகஜோதி தொழிற்சாலை, 41, பஸார் ஒழுங்கை, மும்ஸாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 1920

### உடனே தேவை

தமிழில் நல்ல கையெழுத்தும் நியாயமான சமய அறிவும் ஆர்வமும் உள்ள ஒருவர், பன்னிருதிருமுறை ஆதியாம் நூல்களிலிருந்து சில பாடல்களை அச்சேற்றுவதற்குப் பிரதிபண்ண உடனே தேவை. தம்மைப் பற்றிய விபரங்களுடன் தமது கையெழுத்தில் மனுப் பண்ணவும். பதில் அனுப்புவதற்கு விலாசமெழுதிய முத்திரை ஒட்டிய கூடும் அனுப்புக. வே. தா. சி. சிவகுருநாதன் லக்ஷ்மி வாசம், பருத்தித்துறை 1936

### தேவை

பெற்றோலியம் கூட்டுஸ்தாபனத்துக்கு 45 வயசுக்குட்பட்ட 8-ம் வகுப்பு தராதரம் உள்ள 5வருடத்துக்குக் குறையாத அனுபதம் உள்ள பிற்றர்கள் மெக்கானிக்குகள், பொறுப்பாளர்கள் தேவை. விபரத்துக்கும்விண்ணப்பப் பத்திரத்துக்கும் ரூ. 2/- போஸ்ரல் ஓடர் அனுப்புக. நஸ்றுடுப்பிளிகேற்றர், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 1944

இலங்கை இன்சூரன்ஸ் ஸ்தாபனத்துக்கு குமாஸ்தாக்கள் தேவை. விபரத்துக்கும் விண்ணப்பப்பத்திரத்திற்கும் போஸ்ரல் ஓடர் அனுப்புக நஸ்றுடுப்பிளிக்கேற்றர், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 1943

### விற்பனைக்கு

இரும்புப் பெட்டி (Iron safe) 4 அடி உயரம் 1 3/4 அடி அகலம். விபரம்: 546, கே. கே. எஸ். ரோட்டு, யாழ்ப்பாணம். 1938

### விற்பனைக்கு

தர்மகேணி ரோட் பனையில் துப்பரவாக்கப்பட்ட 15 ஏக்கர் பசளை உள்ள தென்னைச் செய்கைக்கு ஏற்ற காணி இலங்கையை விட்டுச் செல்ல இருப்பவர் ஒருவரால் விற்கப்பட இருக்கின்றது. விபரங்களுக்கு: புரக்டர் எஸ். சபாபதிப்பிள்ளை, தம்பசெட்டி, பருத்தித்துறை. 1939

OPEL KAPITAN EN Series. Eight Thousand Five-Hundred Rupees. No Offers. 46, First Lane, Point Pedro Road, Jaffna. 1942

### வாடகைக்கு

கொழும்பு - புறக்கோட்டைக்கு அண்மையில், கன்னுரத்தெரு 25-ம் இலக்கத்தில் இருக்கும் கடையும், தளபாடங்கள், பொருட்கள் அனைத்தும் குத்தகைக்கு கிடைக்கும். பத்தாயிரத்துக்கு மேல் முதலீடு செய்பவருக்கு சிறந்த ஆதாயம் கிடைக்கும். பாதுகாப்பான இடம் நேரில் வரவும் 1928

சுன்னுகம் மத்தியில் யாழ்ப்பாணம் — காங்கேசன்துறை வீதியில் ஒரு கடை வாடகைக்கு விடப்படும். பின்வரும்விலாசத்தாருடன் தொடர்புகொள்க. M. கண்ணுத்துரை, உணவுஇலாகா, கொழும்பு 2, அல்லது S. S. துரை, கந்தரோடை. 1937

புதுடில்லி. பெப் 17

தலைமறைவு நாகர்களின் பிரதிநிதிகள் கோஷ்டியொன்று இங்குவந்திருக்கிறது. இவர்கள் நாளை பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் பேச்சுநடத்துவார்கள்.

தலைமறை நாகர்களின் கோஷ்டியில் ஐந்து பேர் உள்ளனர்.

—

## வானொலி

### கொழும்பு
வெள்ளி 18 - 2 - 66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை — கே. பி. ஹரன், 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 சிவபுராணம் — நி. மணிக்கவாசகர், 7-30 குரல்வகை, 7-45 தோத்திரப்பாடல்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 உரைச்சித்திரம் — மாதோட்டம், 9-45 வேத மந்திரம்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்தி லிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்திநெறி — சைவசஞ்சிகை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கதாப்பிரசங்கம், 9-30 மகாசிவராத்திரி விசேஷ நிகழ்ச்சி — திருக்கேதீஸ்வர ஆலயத்திலிருந்து அஞ்சல்.

## மகளிர் மன்றம்

பருத்தித்துறை புதன்

வடமராட்சி மகளிர் மன்றத்தின் இரண்டாவது வருடாந்தக்கூட்டம் தலைவி திருமதி ச. ஸ்ரீபத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

விரைவில் நெசவுநிலையமொன்றை ஆரம்பிப்பதென்றும் தற்போது நடைபெற்றுவரும் பாலர் வகுப்பைத் திறம்படநடத்துவதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. புது வருட உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக திருமதி எஸ். ஸ்ரீபத்மநாதன் மீண்டும் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். காரியதரிசி திருமதி எஸ். மாணிக்கவாசகர், தனுதிகாரி திருமதி ஜே. சந்திரசேகரம், 14 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

—

## வரவேற்புக்கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மேயர் திரு. சி. நாகராசாவைக் கௌரவிக்கும் முகமாக 22-2-66-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 6-30 மணிக்கு கந்தர்மடம் சனசமூகநிலைய ஆதரவில் வரவேற்பு பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும். இராசவாசல் முதலியார் திரு. சி. வல்லிபுரம் தலைமைவகிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37 பேர் பலி

புதுடில்லி, பெப். 17 அஸ்ஸாம் ரயில் விபத்தில் இதுவரை 37 பேர் மாண்டதாகவும், 52 பேர் காயமடைந்ததாயும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

## விவசாயப் பொருட்காட்சி

மன்னார், வியாழன் மன்னார் பகுதியில் விவசாயப் பகுதியினர் பொருட்காட்சி ஒன்றை நடத்த ஒழுங்குகள் செய்துள்ளனர். அடுத்த மாதம் 12-ம் 13-ம் திகதிகளில் மன்னார் அல்—அஷார் மகாவித்தியாலயத்திலும் முருங்கன் றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், 27-ம், 28-ம் திகதிகளில் அடம்பன் மகாவித்தியாலயத்திலும் இப்பொருட்காட்சி நடைபெறும்.

## 'கல்லூரி கட்டணங்களில் முரண்பாடு'

### உடுப்பிட்டி எம். பி. கேட்பார்

பம்பலப்பிட்டி, வியாழன் உடைமையாக்கப்பட்ட பாடசாலைகளினுலும், அரசாங்க பாடசாலைகளினுலும் அறவிடப்படுகின்ற வசதிக் கட்டணங்களில் மிகுந்த முரண்பாடு இருப்பதாகவும் அரசாங்க பாடசாலைகளில் அறவிடப்படுகின்ற வசதிக்கட்டணங் களுக்கமைவாக உடமையாக்கப்பட்ட பாடசாலைகளிலும் வசதிக் கட்டணங்கள் அறவிடப்படுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்வாரா? என உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கல்வி கலாச்சார விவகார அமைச்சரைக் கேட்கவிருக்கிறார்.

## பிரிட்டனில் இலங்கை பெண் சாரணர்

லண்டன், பெப். 17 இளவரசி மார்க்கிரட் கலந்துகொள்ளும் சாரணர், பெண்சாரணர் கூட்டுச் சேவை நிகழ்ச்சியில், இலங்கையிலிருந்து பெண்சாரணர் செல்வி பத்மா ஏப்ரகாம் பங்குபற்றுவார்.

நாளை வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் இந்த நிகழ்ச்சி நடைபெறும். கொழும்பு காலி வீதியைச் சேர்ந்த செல்வி ஏப்ரகாம் முன்பு ஏழாவது சாரணர் சங்கத் தலைவியாகக் கடமையாற்றியுள்ளார்.

## நாஸர் செய்தி

கெய்ரோ, பெப். 17 ஐக்கிய அரபு குடியசு அதிபர் நாஸர், வியட்னும் நெருக்கடி குறித்து மண்டல சார்பற்ற நாடுகளின் தலைவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

வியட்னுமில் சாமாதானம் ஏற்படுவதற்குமுதலில் அமெரிக்க விமானங்களின் குண்டு வீச்சுகள் வடக்கு வியட்னுமில் நிறுத்தப்படவேண்டும் என்று தமது கடிதத்தில் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## திருமதி தேஜா. குணவர்தனு யாழ்ப்பாணம் வருவார்

சுழிபுரம், வியாழன் வடபிரதேசக் கிளையின் முற்போக்கு மாதர் சங்கத்தின் வருடாந்த விழா இம் மாதம் 27-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது. கைப்பணிப் பொருட்காட்சி யொன்றை ஆரம்பித்து வைப்பதற்காக திருமதிதேஜா. குணவர்தனு அன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்ருரென அறியப்படுகிறது.


## சுவரொட்டி விளம்பரப் போட்டி

### சைத்திரிகர்களுக்கு 'ஈழநாடு' அளிக்கும் வாய்ப்பு

எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும் சிறுகதை, கவிதைப் போட்டிகள்மூலம் சந்தர்ப்பமளித்துவரும் 'ஈழநாடு' இப்பொழுது சைத்திரிகர்களுக்கும் ஒரு வாய்ப்பளிக்கிறது.

○ இரத்ததானத்தின் நற்பயனை விளக்குவதாக சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கவேண்டும்.

○ சித்திரங்கள் மூவர்ணத்திலும், இரு வர்ணத்திலும் இருக்கலாம்.

○ 22" X 17" அளவு தாளில் சித்திரங்கள் தீட்டப்படவேண்டும்.

○ சித்திரங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும்.

சிறந்த சித்திரமாகத் தெரிவுசெய்யப்படும் சித்திரத்துக்கு 100 ரூபாய் பரிசு வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் இரத்ததானச் சங்கத்தின் ஆதரவில் இப்போட்டி நடத்தப்படுகிறது.

**போட்டி முடிவு திகதி 28-2-66**

போட்டியில் கலந்துகொள்வோர் பின்வரும் கூப்பனை நிரப்பி தமது சித்திரங்களுடன் அனுப்ப வேண்டும். ஒருவர் எத்தனை சித்திரங்களையும் அனுப்பலாம்.

தகுதி வாய்ந்த ஒரு குழு சிறந்த சித்திரங்களைத் தெரிவுசெய்யும். எனினும் இறுதித் தீர்ப்பு 'ஈழநாடு' ஆசிரியருக்கே உரியது.

பெயர் ......................................

விலாசம் ......................................

சித்திரத்தின் தலைப்பு ......................................


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சிவராத்திரி விழா

## சுவாமி பிரணவானந்தா கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம், வெள்ளி மகாசிவராத்திரிதினத்தை முன்னிட்டு, நல்லூர் சட்டநாதர் கோவிலில் இன்று இரவு முழுவதும் விசேஷ ஆராதனைகளும் நான்கு சாமப்பூசைகளும் நடைபெறும். இதனுடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

விசேஷமாகக் கலந்து கொள்ளும் சுவாமி பிரணவானந்தா, ''சிவராத்திரியும் உபாசனையும்'' என்னும் பொருள்பற்றி இன்றிரவு 8 மணிமுதல் பத்துமணிவரை சொற்பொழிவாற்றுவார்.

### நல்லூர் தெற்கில்

நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு நான்குசாம விசேஷ பூசைகளும், அபிஷேக ஆராதனைகளும், கலைநிகழ்ச்சிகளும் கதாப்பிரசங்கங்களும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### வடமராட்சியில்

வடமராட்சி மகளிர்மன்ற ஆதரவில் புலோலி பசுபதீசுவரர் கோவிலில் சிவராத்திரி விழா நடைபெறும். பண்டிதர் கிருஷ்ணபிள்ளை, திரு. உமாமகேஸ்வரன் ஆகியோரின் சொற்பொழிவுகளும், திருமதிஇராசேஸ்வரி சோமசுந்தரம் உட்படப் பலரின் இன்னிசைக் கச்சேரிகளும் செல்வி ஐமுனு பத்மநாதனின் வீணைக்கச்சேரியும் இடம்பெறும்.

### நடைபஜனை

நல்லூர் நடைபஜனைச் சபையினர் நல்லூர் தேவஸ்தான வீதியிலிருந்துவண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தானத்துக்கும் அங்கிருந்து கீரிமலைக்கும் நடை பஜனையாகச் செல்வர்.

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் சிவராத்திரியன்று சி. எஸ். எஸ். மணிபாகவதர், திரு. வி. கே. ஆறுமுகம், த. சுப்பிரமணியம் ஆகியோரின்கதாப்பிரசங்கங்களும், வானொலிப்பாடகர் திரு. கே. சித்திரவேலுவின் பக்திப்பாடல்களும் விசேட நான்கு ஜாமப் பூசைகளும் இடம்பெறும்.

### வட்டுக்கோட்டையில்

வட்டுசிவன் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் சிவராத்திரியன்று சிவன்கோவில்மண்டபத்தில் சொற்பொழிவுகளும், இரவு முழுவதும் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. பகல் ஆலயத்தில் விசேடபூசைகளும், இரவு நான்குயாமப் பூசைகளும், கதாப்பிரசங்கம், கூட்டுப்பஜனை, பேச்சு, நாட்டுக் கூத்து ஆகியனவும் இடம்பெறும். நான்காம் ஜாமத்தில் சங்க நடைபஜனைக் கோஷ்டிகீரிமலைக்குத் தீர்த்த மாடச் செல்லும்.

### நுணுவிலில்

நுணுவில் வீரபத்திரர் ஆலயத்தில் இரவு முழுதும்உபந்நியாசமும் கூட்டுப்பிரார்த்தனையும், நான்கு யாமப் பூசையும் நடைபெறும்.

### யூனியன் கல்லூரியில்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் சிவராத்திரி விழா நடைபெறும். முதலாம் யாமத்தில் திரு. மு. சிவானந்தனின் உபந்நியாசமும் இரண்டாம் மூன்றும் யாமங்களில் கதாப்பிரசங்கங்களும் நான்காம்ஜாம நடைபஜனையும் இடம்பெறும்.

### பரமேஸ்வராக் கல்லூரியில்

திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரியிலும் சிவராத்திரிவிழா இடம்பெறும்.

### வவனிக்குளத்தில்

வவனிக்குளம் புராதன சிவாலயத்தில் சிவராத்திரி விழா நடைபெறும். குடியேற்றத்திட்டத்தில் வாழும் மக்களும், நீர்ப்பாசன இலாகா உத்தியோகஸ்தர்களும் இவ்விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

## காலின்றி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாத அவர் தவழ்ந்து சென்றே கிணற்றில் விழுந்திருக்க வேண்டும் எனவும் ஊகிக்கப்பட்டது.

அவரது சகோதரரான கந்தையா செ வரத்தினம், சகோதரி திருமதி பரமேஸ்வரி, துரைராசா மகாலிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை நடத்தினுர். திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினுர்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)


தலைமன்னருக்கும்ராமேஸ்வரத்துக்கும் கப்பல் போக்குவரத்து சீக்கிரம் ஏற்படுமென்று கூறுகிருர்கள். இப்போது தூத்துக்குடி வழியும் நின்றுவிட்டது. விமான மார்க்கம் ஒன்றுதான் உண்டு. இந்தியாவுக்கு அவசரமாகச் செல்லவேண்டியவர்களில் நால்வர் விமானத்தில் இடமின்றிப் பலாலியிலே நான்கு நாட்களாகத் தவம் கிடக்கிருர்களாம்! தபால்களும் மிகவும் தவக்கமாகின்றன. ரயில்-கப்பல் பாதையை சீக்கிரத்தில் திறப்பதுடன், முன்னிருந்ததுபோல், செலாவணி பர்மிட் இல்லாமலேயே, ரிட்டர்ன் டிக்கெட் எடுத்து பிரயாணம் செய்யும்படியாகச் செய்ய வேண்டும். தாராளமான பிரயாண வசதி இருப்பின், இருதேச பிரச்னைகளும் தீர நல்ல சூழ்நிலை இருக்குமென்ருர் நேருஜி இங்கு வந்திருக்கையில். அவரது இந்த யோசனையை மதித்து இந்தியா, இலங்கை அரசாங்கங்கள் காரியம் செய்யுமா?

❀ ❀ ❀

பாலு நெய் முதலாமிக்க
பசுவில் ஐந்தாடுவானே,
மாலு நான் முகனுங்கூடிக்
காண்கிலாவகையுள் நின்ருய்,
ஆலு நீர் கொண்டல் பூகம் அணியரு மலை
புளானே, வாலுடை விடையாய் உன்றன் மலரடி மறப்பேனே.

— அப்பர்சுவாமிகள்

## மேற்பார்வையாளர்



யாழ்ப்பாணம், வியா. வழக்கறிஞர் திரு. தளையசிங்கம் யோகநாதன் கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியின் உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராக சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.


## மரண அறிவித்தல்

புன்னாலைக்கட்டுவன் மெதடிஸ்ட் ஆங்கிலப் பாடசாலை அதிபரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. குமாரசுந்தரம் நேற்று காலமாகிவிட்டார். இவர் நேசரத்தினத்தின் (ஆசிரியை யாழ். மத்திய கல்லூரி) அருமைக் கணவரும், ரவீந்திரன் (இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பு) குமரேந்திரன், செல்வி மோகனராணி ஆகியோரின் தந்தையாரும், திருமதி குணரத்தினம், திருமதி நல்லலிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவர். அன்னரது பூதவுடல் இன்று (18-12-66) வெள்ளிக்கிழமை மாலை 4-30மணியளவில் இறுதிக் கிரியைகளுக்காக 46/4, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதியிலிருந்து (யாழ்ப்பாணம்) கொட்டடி புதுசேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

1946

## மரண அறிவித்தல்

குடிசன மதிப்பு, புள்ளிவிபர இலாகாவின் முன்னுள் ஊழியரும், பின் ஸி. வி. பாட்ஸ்தாபனத்தில் கடமையாற்றியவரும், திலகேஸ்வரியின் அருமைக்கணவரும் இரகுனுனத்தன், முரளிதரன், விபுலானந்தன் ஆகியோரின் தந்தையுமான அப்பாக்குட்டி கந்தசாமி காலமாகிவிட்டார். இன்று 18-ந் திகதி மாலை அவரது பூதவுடல் யாழ்ப்பாணம் 2-ம் குறுக்குத் தெரு, 59-ம் இலக்க இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, 5 மணிக்கு வில்லூண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

1945

புலோலி
பசுபதீஸ்வரர் கோவிலில்
(பருத்தித்துறைச் சிவன் கோவில்)

## மகா சிவராத்திரி விழா

நிகழும் விசுவாவசு ஆ மாசி மீ எ-ந் திகதி (18-2-66) வெள்ளிக்கிழமை இரவு கீழ்காணும் நிகழ்ச்சிகளுடன் ஷ விழாநடைபெறும்.

**8 மணிக்கு ஆரம்பம்**

1. கூட்டுப்பிரார்த்தனை: வடமராட்சி மகளிர் மன்றம்
2. சைவப்பிரசங்கம்: பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை
திரு. க. உமா மகேஸ்வரன்
3. இன்னிசைக்கச்சேரி:
பாட்டு: திருமதி இராஜேஸ்வரி சோமசுந்தரம்
வீணை: செல்வி ஐமுனு ஸ்ரீ பத்மநாதன்
புல்லாங்குழல்: செல்வி காஞ்சனு ஸ்ரீ பத்மநாதன்
4. புராணபடனம்:

மற்றும் பல நிகழ்ச்சிகளும் நடைபெறும்.
அவ்வமயம் அன்பர்கள் ஷ விழாவில் பங்குபற்றி சிவபெருமானின் அனுக்கிரகத்தைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்
வடமராட்சி மகளிர் மன்றம்

2011


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org